தினமணி

3.04.2018

## டிஎன்பிஎல் ஆலை சார்பில் குறைதீர் கூட்டத்தில்

# மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 3 லட்சத்தில் உதவி உபகரணம் அளிப்பு

கரூர்,ஏப்.2: மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க் கூட்டத்தில் தமிழ்நாடு காகித ஆலை சார்பில் 13 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3 லட்சம் மதிப்பில் உதவி உபகரணங்களை ஆட்சியர் த.அன்பழகன் வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 260 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை பெற்றுக்கொண்ட ஆட்சியர் அவற்றைப் பரிசிலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் டிஎன்பிஎல் ஆலை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்குகிறார் மாவட்ட ஆட்சியர் த. அன்பழகன்.

கூட்டத்தில், தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் சார்பில் 13 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3.01 லட்சத்தில் உதவி உபகரணங்களை வழங்கி ஆட்சியர் கூறியது: கடந்த 2017-ஆம் ஆண்டிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3.40 லட்சத்தில் உபகரணங்கள் ஆலை சார்பில் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.சூர்யபிரகாஷ், சிறுபான்மை அலுவலர் சாந்தி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் காமாட்சி, டிஎன்பிஎல் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன், பொது மேலாளர் (மனித வளம்) பி.பட்டாபிராமன், துணை பொது மேலாளர் (மனித வளம்) வி.ஜி.சுரேஷ், முதுநிலை மேலாளர்கள் வி.ராஜாராம், மக்கள் தொடர்பு அலுவலர் பி.உதயகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.